புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023 ISSN: 2456-821X

=====================================================================

# தெருக்கூத்து கலைஞர்களும் பார்வையாளர்களும்

மா.சங்கர்
ஆய்வாளர்
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
நந்தா கலை மற்றும் அறிவியல்கல்லூரி
ஈரோடு - 638 052

முனைவர்த. அண்ணாதுரை
நெறியாளர்
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஈரோடு 638 052

=====================================================================

ஆய்வுச் சுருக்கம்

நாடகம் என்னும் சொல் நாடு - அகம் எனப் பிரியும். நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். நாட்டின் கடந்த காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதனால்>நாடகம் எனப் பெயர் பெற்றது என்பர். நாடகம் என்பது உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி என்பது முற்றிலும் பொருந்தும். கதையை நிகழ்ச்சியைஉணர்வை நடித்துக் காட்டுவதும்கூத்தாக ஆடிக்காட்டுவதும் நாடகம் எனபர். இதற்குக் கூத்துக்கலை என்னும் பெயரும் உண்டு. தமிழின் தொன்மையான கலை வடிவம் நாடகம் ஆகும். நாடகம் தோற்றம் பெற்றதன் வரலாற்றை அறியப் புகும்போதுபோலச் செய்தல் என்னும் பண்பு அடிப்படையாக அமைதலைக் காணலாம். பிறர் செய்வதனைப் போலச் செய்தல் என்னும் பண்பு அடிப்படையாக அமைவதையும் காணலாம். பிறர் செய்வதனைப்போலத் தாமும் செய்து பார்க்க வேண்டும் என்னும் மனித உணர்ச்சிதான் நாடகம் தோன்றக் காரணமானது. பண்டைய மரப்பாவைக்கூத்துபொம்மலாட்டமாக வளர்ச்சியடைந்த பின்னர்தோல்பாவைக்கூத்துநிழற்பாவைக்கூத்து ஆகியன முறையே பாவைக்கூத்தின் வளர்ச்சி நிலைகளாக மக்களிடையே வழக்கிலிருந்தன.உயிரற்ற பொருள்களை வைத்து விளையாடிய விளையாட்டு, படிப்படையாக வளர்ச்சி அடைந்துஉயிருள்ள மனிதர்களையே வேடம் புனையச் செய்து ஆடிப்பாடிநடிக்க வைத்தது. பாவைக்கூத்து முதல் பல்வேறு நிலைகளில் வளர்ச்சி அடைந்த நாடகம்நாட்டியமாகிநாட்டிய நாடகமாகி இன்று நாம் காணும் புதிய நாடக உலகில் அடியெடுத்து வைத்துள்ளது.

## முத்தமிழ்

இயல்இசை நாடகம் என்ற முக்கலைகளில் சிறந்தது நாடகக்கலை. இது நாட்டுப்புறத்திற்கே உரிய சிறந்தக் கலையாகும். இதில் தெருக்கூத்தென்பது வீதிகளில் தெய்வ சன்னதிக்கு முன்பாக சாதாரண நிலையில் பந்தல் போட்டு தரையில் நடத்தப்படுகின்றது. இதன் வளர்ச்சியே மேடை நாடகமாகும். தெருக்கூத்து நாட்டுப்புற மக்கள் மட்டுமல்லாமல்நகர்ப்புற மக்களையும் பார்வையாளர்களாகக் கொண்டுள்ளது. தொல்காப்பியர் கூறும் எண் வகை மெய்ப்பாடுகளையும் ஒருங்கே பெற்ற சிறந்தக் கலைதெருக்கூத்து. இதனாலேயே நகர்பபுற மக்களையும் பார்வையாளர்களாகக் கொண்டுள்ளது. இவற்றின் பலவகையான நிலைப்பாடுகளையும் கூறும் முகத்தோடு விழைகின்றது இக்கட்டுரை.

## தெருக்கூத்து

தொல்காப்பியர் கூறும் நகைஅழுகைஇளிவரல்மருட்கைஅச்சம்பெருமிதம்வெகுளிஉவகை என்னும் மெய்ப்பாடுகளைக் கொண்டக் கலவையால் தெருக்கூத்துப் பின்னப்படுவதால் எல்லாத் தரப்பினரையும்

பார்வையாளர்களாகப் பெற்றிருப்பது புதியதன்று. தெருக்கூத்தில் உடலசைவையும்உதட்டசைவும்எதார்த்தமாகவும்எளிதாகவும்அமைந்து வருவதால் இது எல்லாத்தரப்பு மக்களையும் பார்வையாளராகக் கொண்டுள்ளது.

கூத்தரும் பார்வையாளர்களும்

கூத்துக் கலைஞர்களைப் பார்வையாளர்கள் அவர்களது நடிப்புத் தன்மையினை வைத்துக் கணக்கிடுகின்றனர். கூத்தர்கள் பார்வையாளர்களின் முக பாவங்களை வைத்து அவ்வப்போது மாற்றம் செய்ய வேண்டும். இதனால் நடிப்பு பார்வையாளர்கள் நினைத்த வகையில் அமையும் போது கை தட்டலும், அன்பளிப்பும் கூத்தர்களின் வெற்றியை உறுதி செய்கின்றன. கூத்து நடிகர்களை ஒரு சாதாரண மனிதன் என்று பார்க்காமல் கதைக்குரியப் பாத்திரங்களாகவே எண்ணி வணங்குவதுண்டு. மதுரை வீரன் பந்தம் கட்டி உலா வரும் போது பார்வையாளர்கள் மனம் கடவுள் பக்தியோடு போற்றி வணங்குகின்றனர். நடிப்புத் திறமையால் பார்வையாளர்களை அதிக அளவில் பெற்றுவிடுகின்றனர் தெருக்கூத்து நடத்தும் கூத்தர்கள். இதனால் மக்கள் கூத்தர்களை தொழில் முறையில் பார்க்காமல் விருந்தினராகவே போற்றி உணவளித்து மகிழ்கின்றனர்.

கூத்தின் போது பார்வையாளர்கள்

கூத்து நிகழ்ச்சி நடக்கும் போது பார்வையாளர்கள் ஒற்றுமையுடனும், அமைதியுடனும் இருந்து கதைகேட்கின்றனர். கூத்து நிகழ்ச்சியில் பார்வையாளர்கள் மறைமுகமாக சில நேரங்களில் ஈடுபடுகின்றனர். இந்நிகழ்வை பார்வையாளர்கள் விரும்பியும் செய்கின்றனர். அல்லது கூத்தர்களுக்கு உதவி செய்யும் நோக்கில் நடைபெறுகின்றது. பார்வையாளர்கள் சில நேரங்களில் கட்டியங்காரனுக்கு நடிகர்களுக்கும் அன்பளிப்பு அளிப்பதில் நகைச்சுவை செய்வதுண்டு. முறுக்கு மாலை அணிதல்பான்பராக்குபணமாலை போன்றவற்றை அணிவித்து நகைப்புக்கு இடம் வகுப்பார்கள். இச்செயலை உயர்சாதிதாழ்ந்த சாதி என்ற பேதமை இல்லாமல் அனைவரும் ஒற்றுமையுடன் கண்டுகளிக்கின்றனர்.

தெருக்கூத்துப் பார்வையாளர் வகைகள்

சிறியவர்கள், இளைஞர்கள்பெண்கள்முதியவர்கள்பண்ணையார்கள் என்று அனைத்துத் தரப்பினரும் தெருக்கூத்திற்கு பார்வையாளர்களாக இருப்பது உண்டு. நகைச்சுவைக்கே சிறியவர்கள் கூத்தைப் பார்க்கின்றனர். இவர்கள் கட்டியங்காரனின் நடிப்பில் ஐக்கியமாகி விடுகின்றனர். சிறியவர்கள் மனநிலைக்கு ஏற்றவகையில் கதைகளைச் சொல்லி அவர்களை நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாகக் கட்டியங்காரன் அமைகின்றான். இளைஞர்களைக் கவரும் நிகழ்ச்சிகள் தெருக்கூத்தில் பல உண்டு. பெண்களின் கைதட்டலும்கண்ணீரும் தெருக்கூத்து நடிகர்களுக்கு அதிகம். திரௌபதிசீதை போன்ற பாத்திரங்கள் பெண்களின் பிடித்தப் பாத்திரமாக அமைந்து மனதைக் கவர்ந்துவிட்ட நிலையில் பெண்கள் அரிசி, பருப்பு போன்றப் பெருட்களை அன்பளிப்பாக அளிக்கின்றனர். முதியவர்களைக் கவரும் வகையில் தர்மன்தசரதன்அரிச்சந்திரன் போன்றப் பாத்திரங்கள் அமைந்துஇவர்களது அன்பிற்குப் பாத்திரமாக அமைகிறது. பண்ணையாளர்களின் மனதைக் கவர துரியோதனன் போன்றப் பாத்திரங்கள் அமைகிறது. இவர்களே கூத்தினை ஏற்பாடு செய்யும் ஏற்பாட்டாளராக உள்ளனர். இவர்கள் அவ்வப்போது அவையில் தோன்றி அன்பளிப்பு செலுத்தி மகிழ்வர்.

தெருக்கூத்தும் பார்வையாளர்களும்

"ஊர் இரண்டுபட்டால்
கூத்தாடிக்குக் கொண்டாட்டம்"

என்ற பழமொழிக்கு ஏற்ப கூத்தில் இரண்டு பிரிவினர் சண்டையிட்டுக் கொண்டு முடிவில் முதியவர்களின் தலையீட்டால் ஒற்றுமை நிலவும். இதனால் தெருக்கூத்து நடத்தி மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்வது நாட்டுப்புறத்துக்கே உரிய செயலாகும். கிராம மக்கள் காசு செலவு செய்யாது, கண்டு தெளியவும் சிந்திக்கும் வகையில் அமைவது தெருக்கூத்து என்ற சடையப்பன் கலையுலகில் தெருக்கூத்து எனும் நூலில் கூறுவார். இதனால் கூத்தின் பார்வையாளர்கள் நாட்டுப்புறத்தில் அதிகம் இதனை மட்டும் அல்லாது நகர்ப்புற மக்களையும் பார்வையாளர்களாகக் கொண்டது தெருக்கூத்து. பாரதக்கதை பாவ விமோசனா என்று கூறுவது

போல பெரம்பலூர் மாவட்ட மக்கள் அதிக அளவில் பாரதக் கிளைக் கதைகளையே கூத்தாக கேட்டும் பார்த்தும் மகிழ்கின்றனர். நாட்டுப்புற மக்கள் வெறும் பொழுது போக்காக மட்டும் தெருக்கூத்தை காண்பதில்லை. நம்பிக்கையின் உச்சமாக நினைத்து திருமணம் நடக்க வேண்டி மீனாட்சித் திருமணம்இறந்தவர்கள் மோட்சம் அடைய வேண்டி கர்ணமோட்சம், மழைவேண்டி விராடபர்வம் போன்ற கூத்துக்களைக் கதைகளாக வைத்துக்கொண்டு இவற்றைக் கண்டு மகிழ்கின்றனர்.

தெருக்கூத்துப் பார்வையாளர்களால் வளர்கிறது

பார்வையாளர்களைக் கவராத எக்கலையும் வெற்றியடைவதில்லை. அனைத்துப் பார்வையாளர்களின் உள்ளங்களிலும் ஊடுருவி பார்வையாளர்களின் உதடுகளை அசைய வைக்கும் பாடல்களும் உரையாடல்களும் நல்லவிதமாக அமைந்து பார்வையாளர்களை மகிழ்விக்கின்றன. இதனால் பார்வையாளர்கள் அன்பளிப்பு அளித்து பல நாள் கூத்துக் கதைகளை அமைத்துக் கண்டு மகிழ்கின்றனர்.

முடிவுரை

தெருக்கூத்து தொல்காப்பியர் கூறும் மெய்பாடுகள் அனைத்திற்கும் இடமாக உள்ளதால் அனைத்துத் தரப்பு மக்களையும் பார்வையாளராக பெறுகிறது. தெருக்கூத்துக் கலைஞர்களை சாதாரண சக மனிதன் என்றில்லாமல் கதைக்குறிய பாத்திரமாகவே நினைத்து வணங்குகின்றனர் மக்கள். தெருக்கூத்தின் போது இனம்சாதி வேற்றுமை இல்லாமல் அவரவர்கள் நினைத்த இடத்தில் இருந்து கண்டு மகிழ்கின்றனர். தெருக்கூத்து சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை பார்வையாளராகக் கொண்டது.

துணைநூற் பட்டியல்

1. இராமநாதன் ஆறு. - நாட்டுப்புறக் கலைகள் (நிகழ்த்து கலைகள்)
2. ஜான் ஆசீர்வாதம் - தமிழர் கூத்துகள்
3. சண்முகசுந்தரம் - நாட்டுப்புறவியல்
4. இராசரத்தினம் - தெருக்கூத்து
5. திருமதி சக்தி பெருமாள் - தமிழ் நாடக வரலாறு
6. வே.ச.திருமாவளவன் - மதுரை வீரன் கதைகள் ஓர் ஆய்வு
7. மா. சங்கர் - கொங்கு நாட்டுக் கூத்து

********* ********* ********** ********* ********* ********** ********** **********